
# அலை

ஓசை - 1 வீச்சு - 1



## காலாண்டு இதழ்

## ஆசிரியர் உள்ளத்திலிருந்து.....

அலையினூடே உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தடைகளை உடைத்து ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும் அலைபோல தரித்திரங்களை சரித்து சரித்திரம் படைக்கும் வண்ணம் மாணவர்களிடையே இலை மறை காயாக இருக்கும் திறமைகளை தாங்கி "அலை" சஞ்சிகை தடம் பதிக்கின்றது.

தங்கள் எண்ணங்களை வண்ணங்களாக வடித்த மாணவர்களின் ஆக்கங்களுக்கு ஊக்கம் கொடுத்து நல் ஆதரவை நல்குவீர்கள் என நம்புகிறேன்.

'அலை' சஞ்சிகை நல்ல விதமாக வெளிவர எல்லா விதத்திலும் உறுதுணையாக இருந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்
- ஆசிரியர் -

ஆசிரியர் :-
கு.ஜெயந்தன்

ஆசிரியர் குழு :-
செ.சாந்தரூபி
தி.மேரிடெசில்டா
அ.மேரி றேதிகா
அ.மேரிபெயாற்றிஸ்
த.பார்த்தீபன்.

எங்களுக்காக
உயிர் துறந்தோரை
நெஞ்சத்தில் நிறுத்தி
ஒரு கணம்
தலைசாய்த்து
அவர்கள் இறப்பு
உயிருக்கல்ல
உடலுக்குத்தான்
இறந்தும் உயிர்வாழும்
உத்தமர்கள் அவர்கள்
நித்தம் புதிதாய்
வீறுடன் எழுவர்

புனித அந்தோனியார்
கல்விக்கூடம்
மணற்காடு
குடத்தனை

# ஆசிச் செய்திகள்.

## பங்குத் தந்தையின் உள்ளத்திலிருந்து .........

மணற்காட்டு றோ.க.த.க பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் ஆக்கங்களை தாங்கி வரும் "அலை" எனும் தமிழ் மணம் கமழும் மணற்காட்டு மாணவர்களது காலாண்டு இதழ் தொடர்ந்து வளர ஆசித்து நிற்கின்றேன்.

பல்வேறு அடிமைத் தனத்தில் சிக்குண்டு இருக்கும் இக் குழந்தைகளின் ஆக்கம் வலுப்பெறவும் அதற்காக அயராது உழைக்கும் மாலை நேர வகுப்பாசிரியர்களுடைய சேவைப்பணி வளர்ந்து இவ் விதமும் செழித்தோங்க ஆசித்து நிற்கின்றேன்.

இப்பயனுள்ள கையேட்டினை அனைத்து மாணவத் தலைமுறைகளும் வாசித்துப் பயன் பெறவும் ஆசிக்கிறேன்.

இறை யேசுவில்<br>
உங்கள் அன்புள்ள<br>
செ.றோய் பேடினன்<br>
மணற்காடு பங்குத் தந்தை.

## பாடசாலை அதிபரின் உள்ளத்திலிருந்து .........

எமது பிரதேசங்களின் நகர்ப்புற மாணவர்களின் வளர்ச்சி நிலையை எட்டுவதற்காக, பல வகையிலும் பாரிய பாய்ச்சல்களை நிகழ்த்தவேண்டிய நிலையில் மணற்காட்டுக் கிராமத்தின் இன்றைய மாணவர் சமூகம் உள்ளது. இவ்வாறான பாய்ச்சல்களின் ஒரு படிநிலை யாகவே "அலை" என்னும் இக் காலாண்டுச் சஞ்சிகை வெளிவருகின்றது எனத் திடமாக நம்பலாம்.

என்றுமே அலைகள் ஓயாத இக்கிராமத்தைச் சேர்ந்த மாணவச் செல்வங்களின் ஆர்வத்திற்கும், தேடலுக்கும் ஒரு களமாக இச் சஞ்சிகை ஓயாத "அலை"யாக காலத்திற்குக் காலம் வெளிவர இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது பாராட்டு -தல்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி.குருகுலலிங்கம்,<br>
அதிபர்,<br>
யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை.



## அலை கடல்

தூரத்தில் ஒன்று தோன்றும்
போது கரை தொட்டு ஒன்று
மடிகின்றது
யாவும் அங்கேயே இருக்கின்றது


சுவாசிக்கின்றது
தூங்கும் குழந்தையின்
வயிறு போல் கடல்
உயர்ந்து தாழ்கின்றது

எல்லையற்ற தூரம் நோக்கி
வலதும் இடதுமாய்
மேலும் கீழுமாய்
சுழல்கின்றன கண்கள்
கீழ் நோக்கி குவிந்து
விரிந்திருக்கும் வானும்
அதைத் தொட்டும் தொடாமலும்
அரை வட்டமாய் பரந்திருக்கும்
கடலும் சிறிய கண்களுக்குள்
ஒடுக்கம் கொள்கின்றன.

அவை
அச்சிறிய கண்களிலிருந்தே
முடிவின்றி விரிவடைகின்றன
ஒரு கணம்
இமைகள் மூடித்திறக்கையில்
கண் முன்னே
பேரண்டத்தின் திறந்த வாய்

வியப்பின் உச்சத்தில்கண்கள்
மலைத்து நிற்கின்றன
திசைப்பினூடாக எழுகிறது
புதிர் நிறைந்த ஒரு கேள்வி
யோசித்துச் சொல்லுமென -அது
சொல்லி விடுகிறது.
சொல்ல நினைத்த அதே பதிலை
அக்கணம் கால் தழுவிச்
செல்லும் அலையில்
கரைந்து காணமல் போனது.

அ.மேரிறாபிகா.
தரம் - 08



## நான் சந்தித்த பேசும் பறவை

என்னுடைய நண்பர்கள், நண்பியர் பலர் என்னை "நண்பி" என்று அழைத்திருக்கிறார்கள். அப்பொழுது எல்லாம் நான் என்னை அழைத்தது யாரென்று அறிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் அன்று நான் பூங்காவில் தனித்திருந்த போது என்னைப் பார்த்து "நண்பியே" என்று அழைத்த குரலைக் கேட்டு எனக்கு ஆச்சரியமும் குழப்பமும் ஏற்பட்டது.

நான் பூங்காவில் காணப்பட்டவர்களைப் பார்த்தேன் அவர்கள் அனைவரும் எனக்கு வெகு தொலைவில் இருந்தார்கள். என்னை அவர்கள் அவ்வளவு மெதுவாய் அழைத்திருக்க முடியாது. நான் யோசனையோடு அமர்ந்திருந்த போது மீண்டும் "நண்பி என்னைத் தெரியவில்லையா? " என்ற குரல் ஒலித்தது.

நான் மீண்டும் சுற்றும் முற்றும் பார்த்துத் திரும்பும் போது என் முன்னாலிருந்த மரக்கிளை ஒன்றில் கிளி ஒன்று அமர்ந்திருப்பதைக் கண்டேன். அது "நண்பியே நான் தான் தங்களை அழைத்தேன்" என்றது. எனக்கு அதன் குரலை கேட்க வியப்பாக இருந்தது. பல கிளிகள் கொச்சை மொழியில் பேசுவதை நான் செவிமடுத்திருக்கிறேன். ஆனால் என்னோடு பேசிய கிளியின் குரல் ஒரு மனிதனின் குரலைப் போன்று அதிலும் குறிப்பாக ஒரு பெண்ணின் குரலையும் விட இனிமையாக இருந்தது.

என்னுடைய வியப்பைப் பொருட்படுத்தாமல் அக்கிளி "நண்பியே என்னோடு பேச மாட்டீர்களா?" என்று கவலையுடன் கேட்டது. "அப்படியல்ல கிளியே உன் பேச்சாற்றல் என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டது" என்றேன். "நான் பிறந்த பொழுது நானும் சாதாரண கிளியைப் போல் தான் கீக்கீ என்று கத்தினேன். நாட் செல்லச் செல்ல என் குரலில் மாற்றம் ஏற்படுவதை அவதானித்தேன். பின்பு ஒருநாள் என் மனதில் ஏற்படும் எண்ணங்களை வாயினால் கூறக்கூடிய சக்தி எனக்கு உண்டாகியது. அச்சக்தியை நான் தனிமையில் இருந்து பேசி வளர்த்துக் கொண்டேன். இதுவரை நான் எந்த மனிதனோடும் பேசவில்லை. இப்பொழுதுதான் முதன் முதலாகப் பேசுகிறேன்" என்றது கிளி. "நல்லது மனிதரைப் பற்றிய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன்.

கிளி ஒரு முறை என்னை நன்றாகப் பார்த்து பின்பு "மனிதர் யாவரும் சுயநலக்காரர்கள், போட்டி பொறாமை கொண்டவர் உள்ளத் தூய்மையற்றவர்கள். அவர்களால் தான் இந்த பூமி அழிந்து நாசம் அடைகின்றது" என்றது. அதன் பேச்சு எனக்கு ரோசத்தையும், கோபத்தையும் உண்டு பண்ணியது. "நீ கூறுவது தவறு, மிருகங்கள் செய்யாத தீய செயல்களையா மனிதர்கள் செய்கின்றனர்?" என்றேன்.

"ஆம், இன்று மனிதர் மிருகங்களையும் விட மோசமான செயல்களைத் தான் செய்கின்றனர். மிருகங்கள் ஆண்டான், அடிமை முறைப்படி நடப்பதில்லை, பதவிக்காக சண்டை பிடிப்பதில்லை, சொத்துச் சேர்ப்பதற்காக இரவு, பகல் பாராமல் ஓடித்திரிவதில்லை, தமது சகாக்கள் பட்டினியால் வாட தாம் மாடமாளிகையில் வாழ ஆசைப்படுவதில்லை, போதைப் பாவனையில் தம்மைத்தாமே அழித்துக் கொள்வதில்லை, நாசம் புரியும் ஆயுதங்களை பாவிப்பதில்லை, பொய் பேசுவதில்லை, உள்ளத்தில் நஞ்சும் வாக்கில் தேனுமாக பேசுவத்தில்லை, கூலி, சம்பளம் என்ற பெயரால் அடுத்தவனின் உழைப்பை சுரண்ட நிலைப்பதில்லை. ஆனால் இவை அத்தனையும் மனிதரிடத்தில் உண்டு." என்றது கிளி.

"ஏன் மிருகங்கள் ஒன்றையொன்று கொலை செய்வதில்லையா? ஒன்றையொன்று வேட்டையாடிப் புசிப்பதில்லையா?" என்று கேட்டேன். "எச்செயலுக்கும் காரணம் தான் முக்கியம். ஒரு மிருகம் இன்னொரு மிருகத்தை கொலை செய்வது உணவுத் தேவைக்காக. அது தவறானது அல்லவே. ஏன் மனிதரும் பறவை, விலங்குகளை வேட்டையாடுகின்றனர் தானே" என்றது. "அப்படியாயின் உணவுக்காகவன்றி மிருகங்கள் சண்டையிடுவதே இல்லை என்றா கூறுகின்றாய்?" என்று கேட்டேன். "சண்டையிடுகின்றனதான். ஆயினும் அவற்றின் அறிவுக்குட்பட்ட வகையில் தான் அவை வாழும். மனிதரைப் போல் அவற்றிற்கு ஆறறிவு இல்லையே ஆறறிவு மனிதர் அவ்வாறு நடந்து கொள்வது தவறு தானே?" என்றது.

எனக்கு அது சொல்வது சரியானதாகவே பட்டது. "இவை மட்டுமா? மனிதர் எம் இனத்தை ஆட்டிப்படைக்கின்றனர். பறவைகளையும் மிருகங்களையும் கூண்டுகளில் அடைத்து வைக்கின்றனர். அடித்துத் தம் சொற்படி நடக்க வேண்டுமென பயமுறுத்துகின்றனர். எம்மை மிருககாட்சி சாலைகளிலும்

சரணாலயங்களிலும் அடைத்து வைத்து காட்சிப் பொருளாக்கின்றனர். இவ்வாறு நாங்கள் செய்ய முனைந்ததுண்டா? நாங்கள் மனிதரைப் பிடித்து வந்து அடைத்து வைத்து வேடிக்கை பார்ப்பதை மனிதர் விரும்புவாரா?" என்று தனது வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்த்தது கிளி. மனிதர் செய்யும் அடாத செயல்களைப் பற்றி மனித வர்க்கம் அல்லாத இன்னொரு வர்க்கத்திலிருந்து அறிந்து கொண்ட எனக்கு பெரும் கவலை ஏற்பட்டது. அதே வேளை கிளியோடு இதமாகப் பேசி மனிதரைப் பற்றிய நல்லெண்ணத்தை வளர்க்க வேண்டுமென்றே எண்ணமும் தோன்றியது. அவ்வேளை எங்கிருந்தோ பறந்து வந்த கல்லொன்று கிளியைப் பலமாக தாக்கியது. கிளி ஆ.... என்ற சத்தத்தோடு கீழே விழுந்தது. நான் உடனே எழுந்து கிளியின் அருகே சென்றேன். கிளி ஏதோ என்னோடு பேச முயன்றது. ஆனால் அதற்குள் அதன் உயிர் பிரிந்து விட்டது.

நான் கோபத்தோடு கல்லால் எறிந்தது யாரென்று பார்த்தேன். ஒரு சிறுவன் என்னைப் பார்த்து "கிளி இறந்து விட்டதா அக்கா? நான் தெரியாமல் செய்து விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி ஓட்டமெடுத்தான். அபூர்வ சக்தியோடு பிறந்து பறந்த பறவையொன்று இறந்துவிட்டதே என்ற ஆதங்கத்தோடும் துயரோடும் நான் பூங்காவை விட்டு வெளியேறினேன்.

செ.மரிய நிரோஜா
தரம் - 11
மணற்காடு.

---

**வளமாக வாழ்வோம் .....**

நீதி என்றும் எங்களுக்காகவே
தர்மம் என்றும் எங்களுக்காகவே
வாருங்கள் மாணவ மணிகளே
ஒன்றாகி கல்வி கற்றிடுவோம்

தோழர்களே!
கல்வி என்றும் கடலானது
அறிவு என்றும் மலை போன்றது
ஒன்றாகும் காலம் எல்லாம் நாம்
ஆசிரியரின் சொல்லில் நடப்போம்
வாருங்கள் நண்பர்களே
வளமாக வாழ வழிவகுப்போம்.



போ.கனிஸ்ராறோஸ்
தரம் - 9
மணற்காடு

## வரம் தருவாயா?

அன்னையே...!
என்னை பத்துமாதம் சுமந்து பெற்றவளே
என்னை உன் அன்புக் கரங்களால் - அரவணைப்பவளே
எனக்கு இனிய தாயாக வாய்த்தவளே
மறு பிறவியிலும் நான் உன் மகனாக
பிறக்க வரம் தருவாயா?



அ.கஜின்சன்
தரம் - 03

---

## என் வேதனை புரியவில்லையா?



வேதனை என்னை வாட்டுகிறதே - அதை
தீர்க்க யாருமில்லையா?
வேதனை என்னை வதைக்கிறதே - எனை
தேற்ற யாருமில்லையா?
வேதனை என்னை புலம்பி அழவைக்கிறதே - என்
கண்ணீர் துடைக்க யாருமில்லையா?

ஓ மானிடனே!
என் வேதனையை தீர்க்க - உனக்கு
மனமில்லையா?
என் அழுகையைத் துடைக்க - உனக்கு
விருப்பமில்லையா?
என் கவலையை போக்க - உனக்கு
இரக்கமில்லையா?

ஆ! கடவுளே
என் வேதனையை நீயாவது
தீர்த்திட மாட்டாயா?
உனக்குக் கூட என் வேதனை
புரியவில்லையா?

அ.மேரிறேதிகா
தரம் : 11, மணற்காடு.

- அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படாதே -

# சிறுகதை
## நட்புக்குள் வாழ்வோம்!

சேவல் விடியற் பொழுதை நினைவுபடுத்திய வண்ணம் இடைவிடாது கூவியது. கதிரவன் கூட சூரியக்கதிரை செலுத்தப்போராடிய வண்ணம் இருந்தது. ஆனால் சுமனுக்கு விடிந்தும் விடியாதது போல் இருந்தது.

சுமன் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்த கிராமத்துப் பையன் அவன் வீட்டில் அனைவரும் சுமனை படிப்பிப்பதற்கே விரும்பினர். சுமனும் நன்றாக கற்றான் அவனது கல்வி வாழ்கையில் அவன் அதிகமான நண்பர்களைக் கண்டிருக்கிறான் ஆனால் சுஜா போன்ற ஒரு நண்பியை அவன் எதிர்பார்க்கவேயில்லை. அவளது குடும்பம் எளிமையானது, வசதி குறைந்தது, குடும்பம் என்றால் இப்படித் தான் என்ற அளவுக்கு அன்பான குடும்பம் அவளுக்கு ஐந்து சகோதரிகள், அவளே கடைசி. அவள் சுமனுடன் மிகவும் நெருங்கிப் பழகினாள். சுஜாவின் குடும்பத்துடன் சுமனும் ஒருவனாய் இணைந்து கொண்டான். சுமன் தனது தேவைகளைப் பொறுத்து சுஜா வீட்டுக்கு சென்று வருவான். இவ்வாறாக நட்பு வளர்ந்து வந்தது.

இவர்களது நட்பு நாளுக்கு நாள் நேரத்துக்கு நேரம் வளர்ந்து இணைபிரியா நண்பர்கள் ஆனார்கள். ஆனால் கண்மூடிய சமூகம் அவர்களைக் காதலர்களாக நோக்கியது. ஒருநாள் சுஜாவின் அயலவர் ஒருவர் சுமனின் தந்தையை வீதியில் சந்தித்து,

“என்ன நீங்க பெரியவராச்சே உங்க பையன் நம்ம வீட்டிற்கு பக்கத்தில் இருக்கிற பொண்ணு சுஜாவோட சுத்துறானே..... நெடுகிலும் தான் அங்க வாறான், போறான் வந்தால் பறவாயில்லை. இங்க...... அந்தப் பொண்ணுக்கு தகப்பன் இல்லை, ஐந்தும் பெண் பிள்ளையளுங்க, நம்ம சனமெல்லாம் உங்க பையனை தப்பாத்தான் எடைபோடும், தப்பிருந்தா மன்னிசுடுங்க.....” என்று கூறிவிட்டு போயிட்டார்.

இதைக் கேட்ட சுமனின் தந்தை மனச் சுமையுடன் கிளம்பினார். விடுமுறைக்குள் சுமனுக்குத் தெரியாமல் பாடசாலை மாற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்தார்கள். விடுமுறை முடிந்து விட்டது. பட்டணத்தில் உள்ள அவனது அத்தையார் வீட்டிற்குச் சென்று படிக்கும் படி தாயார்

அறிவித்தார். சுமனோ மறுத்தான்.

"என்னம்மா, என்ன இது என்னைக் கேட்காமல்...... எனக்கு இந்தக் கிராமத்தில் படிக்கத்தான் பிடிச்சிருக்கு. நோ...... நான் மாட்டன்". என்று பிடிவாதம் பிடித்தான்.

தம்பி நீ இப்ப A/L அதுவும் Bio படிக்கிறாய், நீ கிராமத்தில் படிக்கிறதைவிட பட்டணம் போய் படிக்கிறது தான் நல்லது. என்று தாய் திசை திருப்பினாள்.

"அம்மா என்னைவிட சுஜா நல்லாப் படிப்பாள் அவள் கூட நம்ம பாடசாலையில் தானே படிக்கிறாள். பட்டணத்துப் பாடசாலையுடன் ஒப்பிடும் போது கூட சுஜாதாம்மா First ஆ நிக்கிறா. அவள் படிக்கிற ரீச்சரட்டத்தானே நானும் படிக்கிறன், இனிப் படிக்கிறதும் படிக்காது விடுறதும் நம்மைப் பொறுத்தது." என்று சுமன் கூறவும்

"என்ன... யாரெடா சுஜா அவளால் தான் உன்னை ஊரைவிட்டே அனுப்புறம், அந்த பிச்சைக்கார நாய் உன்னோட பழகிறதால தான் நீயே தேவயில்லை என்று உன்ர அத்தை வீட்ட அனுப்புறம்." என்று தந்தை அதட்டியதும் "சுமனுக்கு தலை சுற்றியது. சீ.... என்னது 21ம் நூற்றாண்டிலும் இவர்கள் இன்னமும் பட்டிக்காடாகவே இருக்கிறார்கள். நல்ல ஒரு நண்பியை ஏன் தப்பா நினைக்கிறாங்களே." என்று சுமன் மிகவும் வருந்தினான்.

சுஜாவிற்கும் தன் போன்ற நிலை வருமுன் தான் ஊரை விட்டுச் செல்வது தான் சரி என உணர்ந்தவன் மனம் உடைந்த வண்ணம் தான் சுஜாவுடன் பழகியது தப்பா சரியா என மனதிற்குள் போராடினான்.

சுமனின் பாடசாலை மாற்றம் என்பது பாடசாலை முழுவதும் பரவியது. அனைவரையும் கவலைக்குள்ளும் வியப்புக்குள்ளும் ஆழ்த்தியது. பாடசாலை வாழ்க்கையில் அவன் அக்கிராமத்தில் 12 வருடங்கள் வாழ்ந்தவன். இன்று அவன் வளர்ந்ததால் ஆண் பெண் நட்பு தப்பாகின்றது என்பதை அவனைத் தவிர வேறு யாரும் உணரவில்லை. சுமனுக்கென மாணவர்கள் அனைவரும் பிரியா விடையினை ஒழுங்கு செய்தனர். சுஜாவை சக மாணவர்கள் கூட தப்பாகவே கணித்தார்கள். சுமனது பிரிவை தாங்காது அவளது கண்கள் கூட அழுது சிவந்தது. அன்று சுமனின் 12 வருடத்தில் பாடசாலையின் இறுதி நாள் அனைவரது முகத்திலும் கவலை படிந்திருந்தது. சுமனும்

பிரிவைத் தாங்காது துடித்தான். பிரியாவிடையில் தனது இனிய நட்பை நினைத்துப் பாடினான். சுமன் பாடசாலை மாற்றம் பெற்று ஓராண்டு காலமாகிறது. சுமன் இன்று படித்து உயர்தரப் பரீட்சை எடுக்கிறான், சுஜாவும் கிராமத்தில் படித்து உயர்தரப் பரீட்சை எடுக்கிறாள். இருவரும் சிறந்த பெறுபேற்றுடன் மருத்துவத்துறை மாணவராக இன்று பல்கலைக்கழகத்துள் பல்லாயிரக் கணக்கான மாணவருடன் வலம் வருகின்றனர்.


கால ஓட்டத்தில் இருவரும் டாக்டர் நண்பர்களாகவே வெளி வருகின்றனர். இருவர் வீட்டிலும் திருமண ஏற்பாடு. ஊரெல்லாம் அதே பேச்சு திருமண விடயத்தை தந்தை கூறும் போது சுமன் இடைமறித்து "அப்பா நாங்கள் நல்ல நண்பர்களாகவே இருக்கின்றோம். ஏனப்பா! எங்கட சமூகம் எல்லாத்தையும் தப்பான கண்ணோட்டத்தில் நோக்குது" என்றவன் திரும்பிய போது சுஜாவும் அவனது கதைக்கு தலையசைத்து சிரித்தாள்.

"சுமன் it is grade உண்மையிலே நட்பு காதலைவிட வலிமையானது. அதற்காக எமக்கு கலியாணமே செய்து வைக்காமல் விட்டு விடாதீர்கள். அங்கிள் நான் ஒருவரையும், சுமன் அத்தை பெண்ணையும் Love பண்ணி இருக்கிறோம்." என்று கூறியவள் சுமனுடன் சேர்ந்து சிரித்தாள் அவர்களது களங்கமற்ற சிரிப்பு சுமனின் தந்தையை தவிர மற்றவர்களை சேர்ந்து சிரிக்க வைத்தது.

சுமனுடைய தந்தை தனக்குள்ளே உடைந்து போனதை முகம காட்டியது "சுமன் உங்களை நட்பா நினைச்சிட்டேன் எனக்கு வயது தான் அதிகரித்ததே தவிர உங்களை புரியிற அளவு புரிந்துணர்வு இல்லை" என்றவரை சுஜா இடைமறித்து அங்கிள் நீங்கள் செய்தது தப்பில்லை நண்பர்களாக இருந்த எத்தனையோ பேர் காதலர்களாக மாறியிருக்கிறார்கள். உங்கள் இடத்தில் இருந்தால் நாங்களும் இதையே செய்திருப்போம் என்று கூறினாள்.

இவர்களது நட்பை உறுதி செய்வது போல் மரங்கள் காற்றினால் தலையசைத்தன.

[யாவும் கற்பனை]



S.மேரி அல்க்கனா
தரம் - 11

## ஐந்தை அறிந்து கொள்ளுங்கள்

01. ஐம்பெரும் காப்பியங்கள் :-

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

02. ஐவகை நிலங்கள் :-

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

03. ஐம்பூதம் :-

நிலம், நீர், தீ, வளி, ஆகாயம்.




04. ஐம்புலன் :-

சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம்.

05. ஐம்பொறி :-

மெய், வாய், கண், மூக்கு, செவி.

06. ஐங்குரவர் :-

அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன்.

07. பஞ்சமா பாதகங்கள் :-

கொலை, களவு, கள் உண்ணல், பொய், குருநிந்தை.

08. ஐவகை அக ஒழுக்கங்கள் :-

புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல்.

09. ஐவகை புற ஒழுக்கங்கள் :-

வெட்சி, வஞ்சி, வாகை, உழிஞை, தும்பை.

10. பஞ்ச பாண்டவர்கள் :-

தர்மன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்.

11. ஐ வகை நிறங்கள் :-

வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை.

12. ஐ வகை பால் :-

ஆண்பால், பெண்பால், பலர்பால், பலவின் பால், ஒன்றின் பால்.

13. ஐம் புனல் :-

ஐந்து வகை சுவையுடைய நீர்.

14. பண்புடைமைக்குரிய ஐ வகை குணங்கள் :-

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை.

பே.வியாகுலறோஸ்
தரம் : 10

## கல்வி



கல்வியே வாழ்வதன் சொத்து - அதை
கற்பதே வாழ்வினில் நீ இடும் சொத்து
அறிவினை வளர்த்திடு கற்று - இந்த
அவனியே போற்றிடும் நீ பெறும் முத்து

நூல் பல கற்று நீ உயரு - ஆண்டு
நூறுதான் உலகினில் உனக்கென்றும் வயது
பேறுதான் கல்வியே உனக்கு - இதை
பேணாது வைப்பதால் நேருமே இழப்பு.

குருவை மதித்திட வேண்டும் - கல்வி
கொடையதைப் பெற்றிட உழைத்திட வேண்டும்
கடவுளை வணங்கிட வேண்டும் - தினம்
கற்று நாம் உயர்ந்திட அவன் அருள் வேண்டும்.

முயற்சியால் வெற்றியே எமக்கு - அன்று
முயன்று நாம் வென்றவர் வாழ்வினைத் தொடங்கு
இகழ்ச்சியை ஏற்பதை நிறுத்து - வாழ்வை
இன்பமாய் மாற்றி கல்வியைத் தொடங்கு.

டே. றொகாந்தன்.
தரம் : 10
மணற்காடு, குடத்தனை

## எங்கள் இதயம்



ஒரு நிமிடம் சராசரி 72 தடவைகள் துடிக்கின்றன. ஒரு நாளில் 103, 680 தடவைகள் துடிக்கின்றன. இது ஓய்வின்றி எதுவித "சேவிஸ்" இல்லாமல் சராசரி ஒரு மனிதன் 70 வருடங்கள் வாழ்கின்றபோது இதயம் 260 கோடி தடவைகள் துடிக்கின்றன.

## செந்தமிழா....



ஆண்டாண்டு காலமதாய்
அடிமைப்பட்டு அடக்கப்பட்டு வாழ்வதில்
அர்த்தமென்ன சொல் தமிழா
அடிமை விலங்கினையே
அடியோடு உடைத்தெறிந்து
ஆதியிலும் தமிழன் வாழ்ந்தான் என்று
பண்டார வன்னியன் பரம்பரையில் வந்த
பழந்தமிழா பாரே அதிர்ந்திட எழுந்து
பறைதட்டிச் சொல்லடா தமிழா.

இ.பிறின்ஸ் ஜீவிதன்.
தரம் : 11
மணற்காடு.

---

## நட்பு



இதயம் எனும் பூந்தோட்டத்தில் அழகிய மலராக
மலர்ந்துள்ள நட்பு
நம்மிடையே தொடர்கின்ற பந்தம்
நெடுங்கால சொந்தம்
நாம் கொண்ட பாசம்
தடம் மாறா நட்பு
பிரிவுகள் தவிர்க்க முடியாதவை
நட்புகள் பசுமையானவை
பூக்களின் அழகு உதிரும் வரை
நட்பின் அழகு இறப்பு வரை
கடல் வானம் கூட நிறம் மாறும்
நம் நட்பு என்றுமே மாறாது
கல்வி எனும் அறிவு வளர
அன்பு எனும் உறவு வளர
கற்போம் நட்பு எனும் பாடத்தை.

கீ.றெக்ஸ்லீனா
தரம் : 09
மணற்காடு.

## அன்னை



முந்நூறு நாட்கள் கருவோடு
என்னை சுமந்து உன் மடியினில்
கனம் என்றும் பாராமல்
பசியோடு நீ இருந்து - என்னை
பெற்றெடுக்க நீ கல்லறைக்கு
சென்று திரும்பினாய் அன்னையே

உன் இரத்தத்தைப் பாலாக்கி
அதை நீ எனக் கூட்டி
தாலாட்டி சீராட்டி
கண்ணை இமை காப்பது போல்
என்னை தினம் காத்தாய் அன்னையே.

உன் பாசம் என்னும் ஆழ்கடலில்
அன்பு எனும் முத்தெடுக்க வைத்தாய்
எனக்கு துன்பம் எனும் போது
மனதிற்கு ஆறுதல் தருவாய் அன்னையே.

என் கண்களில் கண்ணீர் வந்தால்
துடித்திடுமே உன் மனது
தெய்வத்திற்கு நிகர் நீயே
தரணியிலே நம் கண்கண்ட தெய்வம் நீயே.

கி.அருள்சீலி
தரம் : 8
மணற்காடு.

## மரணதண்டனை



சீனாவில் ஒரு வருடம் 10,000 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றதாம். ஏன் தெரியுமா அங்கு சனத்தொகை அதிகம் என்பதால்.

**பொது வினாக்கள்.**

01. வியட்னாமின் சமாதான நகரம் எது?
கநோய் நகரம்.

02. ஆபிரிக்காவின் சிறப்புப் பெயர் யாது?
இருண்ட கண்டம்.

03. றோஜாவின் ராஜா யார்?
ஜவகர்லால் நேரு.

04. மரண தண்டனை வழங்குவதில் முன்னணி நாடு எது?
சீனா.

05. பாலில் உள்ள புரதம் எது?
கேசின்.

06. தமிழீழத்தின் முதல் கரும்புலி யார்?
கப்டன் மில்லர்.

07. தேசிய கல்வி நிறுவகம் அமைந்துள்ள இடம் எது?
மஹரகம.

08. கோள்களில் எதிர்பக்கம் சுற்றும் கோள் எது?
யுரேனஸ்.

09. விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் யார்?
ராகேஸ் சர்மா.

10. சூரியன் மறையும் நாடு எது?
இங்கிலாந்து.

தி.மேரிறூடா
தரம் : 11

**விற்றமின் "D"**

காலை வெய்யிலில் நிற்கின்ற போது எமது தோலினூடு விற்றமீன் "D" சேர்கின்றது

## சமுதாயத்தில் சிறுவர்களைப் பாதுகாப்போம்.



பிஞ்சு மனம் மெல்ல கொஞ்சும் மனம்
பஞ்சு மேனி மிஞ்சும் வார்த்தை
கள்ளம் இல்லா வெள்ளை உள்ளம்
வெள்ளமாக கொள்ளை கொள்ளும்.

செல்லமாகத் துள்ளும் அகவையில்
தூக்க முடியாத சுமையை
நெஞ்சில் ஏக்கமுடனே
தாயான பிஞ்சு குஞ்சுகள்

கற்க வேண்டிய வயதில்
விற்றுப் பிழைப்பது
எந்த நாட்டு நியாயம்
யாருக்கு இல்லை ஆதாயம்.

இன்றைய சிறிசுகள்
நாளைய தலைவர்கள்
நாணயத்திற்காக நயத்திற்கு
வருங்காலத்திற்கு தீ வைப்பதா?

சமுதாயத்திற்கு ஆதாயம்
இளம் சமுதாயத்தைக் காப்பதே
பூக்களின் வாசனை வேண்டுமா?
மொட்டுகளை முறிக்காதீர்

சிறுவர்கள் ரோஜா என எண்ணி
முட்களாய் காவல் இருக்காதீர்
காவலுக்கு வைத்த முள்ளே
காலைக் குத்திய கதையாகிவிடும்

பாலரின் பக்குவம் அறிந்து
உரிமைகளையும் உன்னதங்களையும் புரிந்து
அத்திவாரங்களை உறுதியாக இடுங்கள்
திரும்ப திருத்தியமைக்க முடியாது

பாலரைக் காப்பது எம் கடமை
தனி எம் கடமையல்ல
நல்லோரும் வல்லோரும் எல்லோரும்
இணைந்து காப்பது பொதுக் கடமை.

அ.தனிலா
தரம் : 09
மணற்காடு.

---

## வேண்டும் சமாதானம்.

வேண்டும் வேண்டும் சமாதானம் வேண்டும்.
வேள்விகள் தளைக்க வேண்டும் சமாதானம்.
மலர்ச்சிகள் பொங்க வேண்டும் சமாதானம்.
மானிடம் சிறக்க வேண்டும் சமாதானம்.

சமாதானத் தென்றல் வீசிட வேண்டும்
சமாதானக் காற்றை நாம் சுவாசித்திட வேண்டும்.
யுத்தம் யாவும் நீங்கிட வேண்டும்.
எம் இனம் விடுதலை பெற்றிட வேண்டும்.

உலகினில் உலகினில் வேண்டும் சமாதானம்.
மானிடம் ஒன்று சேர்ந்திட வேண்டும் சமாதானம்.
வெள்ளைப் புறா பறந்திட வேண்டும்.
வெற்றி பெற்று தமிழீழம் நிமிர்ந்திட வேண்டும்.

சமாதானப் பூ மலர்ந்திட வேண்டும்.
யுத்தம் என்னும் பூ வாடி விழுந்திட வேண்டும்.
சமாதானமே உன்னைக் கூவி அழைத்திடுவோம்
விரைந்து வா தமிழினத்தை நோக்கி.

நம்பிடுவோம் சமாதானம் மலர்ந்திடுமென
நம்பிக்கை விரைந்த வா சமாதானமே
யுத்த அவலங்கள் நீங்கிட வேண்டும்.
தமிழ் இனத்திற்கு விடிவு கிடைத்திட வேண்டும்.

நன்றி.

அ.மேரி பெயாற்றிஸ் (நதியா)
தரம் 11



## மீனவர் வாழ்க்கை.

உலகில் பெரும் பகுதி நீரால் சூழப்பட்டிருப்பது நாம் அறிந்த விடயம். புவி மேற்பரப்பில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு நீர்ப்பரப்பாகும். மிகுதி நிலப்பரப்பாகும். இருந்த போதிலும் மனித வாழ்க்கைக்கு உகந்த நிலப்பரப்பு மிகக் குறைவே. அதிகமான நிலப்பரப்புக்கள் உயிரினங்கள் வாழப் பொருத்தமற்ற பனிமலைகள், பாலைவனங்கள், பள்ளத்தாக்குகள், சதுப்பு நிலங்கள், காடுகள் போன்றவையாக இருக்க மிகுதி நிலப்பரப்பிலேயே உயிரினங்கள் வாழ்கின்றன. எனவே ஒப்பீட்டு ரீதியில் நீர்ப்பரப்பு மிகப் பெரிதாகவும் மனிதன் வாழும் பகுதி மிகக் குறைவாகவும் உள்ளது. இப்பகுதிகளில் பெரும்பாலானவை கரையோரங்களாக இருக்க அப்பகுதியில் வாழும் பெரும்பாலான மக்கள் கடற்றொழிலில் ஈடுபடும் சமூகமாகவே காணப்படுகின்றது

கடலன்னையானவள் தன்னிடத்தே பெறுமதிமிக்க பல வளங்களைக் கொண்டுள்ளாள். அவற்றில் ஒன்று நீர் வாழ் உயிரினங்கள் ஆகிய மீனினம் ஆகும். மீனவ சமூகத்தினர் இக்கடல் உயிரினங்களைப் பிடித்து மனித குலத்தின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதுடன் தமக்கு தேவையான வருமானத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். கடல் நிறைய வளங்கள் இருந்த போதும் மீனவர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்வது இலேசான காரியம் அல்ல. அது ஒரு ஜீவமரணப போராட்டமே. ஏனென்றால் கடலுக்குச் செல்லும் ஒவ்வொரு மீனவனும் மீண்டும் கரை திரும்புவோமா? என்ற ஐய உணர்வோடு செல்ல வேண்டி உள்ளது. எவ்வளவு தான் விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட போதிலும் இயற்கையின் சீற்றங்களை இன்றுவரை வெல்லமுடியாது இருப்பதே உண்மை. அவ்வாறே கடலிலும் திடீர் திடீர் என ஏற்படும் புயல்கள், சுழிகள் என்பவற்றில் சிக்கி மீனவர்கள் உயிரிழக்கவும் திசைமாறிப் போகவும் வேண்டி ஏற்படுகின்றது. இவை அனைத்திலிருந்தும் தப்பி கரை திரும்பும் எல்லோரிடமும் மீன்கள் கிடைத்திருப்பதில்லை. சிலர் வெறுங்கையுடன் திரும்புகின்றனர்.


எனவே மீனவர் முன் அளவற்ற செல்வம் கொட்டிக் கிடக்கின்ற போதிலும் அவர்களுடைய வாழ்க்கை ஒன்றும் பெரிதாக முன்னேற்றம் கண்டதாக கூறிவிடமுடியாது. ஏனெனில் இன்று உலகில் வாழும் வறிய மக்களின் குறிப்பிடத்தக்க தொகையினர் இந்த மீனவர் சமூகத்தினர் என்றால் மிகையில்லை.

நீ.அருள்நேசன், தரம் : 11, மணற்காடு.

---

## விரைந்து வா வெண்புறாவே....

சமாதானமே விரைந்திடு
விரைவில் எம்மண்ணில் உதித்திடு - எம்
மண்ணில் சமாதானம் குரல் பேசட்டும்.



அடிமை ஒழியட்டும் - எம்
மண் விடிவைக் காணட்டும்
மக்களில் நிம்மதி மலரட்டும்.

அடிமையாய் வாழ்ந்தது போதும்
அகதிகளாய் பட்டம் பெற்றது போதும்
நாம் விடிவைக் காண விரைந்திடுவோம்.
விடிவை விதைத்திடுவோம் - விளைந்திடும்
விதைகள் விரைவில் எம்மண்ணில்
சமாதானப் புறாவே
எம்மண்ணில் சமதான விதையை
விதைத்திடு
விரைந்திடு புறாவே
விரைந்து வா புறாவே.

தி.மேரி டெசில்டா
தரம் : 11
மணற்காடு.

## சுதந்திரம்



ஓர் ஊரில் மதன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு மிருகங்கள், பறவைகள் வளர்ப்பது என்றால் மிகுந்த மகிழ்ச்சி. அவன் ஒரு நாள் தந்தையுடன் காட்டுக்குச் சென்றான். அப்பொழுது ஓர் கிளியின் குரல் கேட்டது. உடனடியாக அவ் இடத்துக்குச் சென்றான். "அப்பா இங்கே வாருங்கள், ஓர் அழகான கிளி ஒன்று கூட்டுடன் இருக்கிறது. அப்பா அதை எனக்குப் பிடித்துத் தாருங்கள்" என்றான். "இல்லை மதன் அது பாவம் தன்னுடைய கூட்டிலே சந்தோஷமாக வாழட்டும், நீ விட்டுட்டு வா" என்று அன்பாகக் கூறினார். "அப்பா பிடித்துத் தாருங்கள்" என அடம்பிடித்தான். மகனுடைய தொல்லை தாங்க முடியாத தந்தை கிளிக்குஞ்சைப் பிடித்து மகனிடம் கொடுத்தார்.

மதனுக்கு சந்தோஷமோ தாங்க முடியவில்லை, அதனை வீட்டுக்கு கொண்டு வந்து ஓர் கூடு தயாரித்து அதனுள் விட்டான். அதற்கு பல வகையான உணவுகள், பழங்கள் போன்றவற்றை வைத்து அன்புடன் வளர்ந்து வந்தான். ஆனால் கிளியோ மகிழ்ச்சியுடன் காணப்படவில்லை.

மதனுக்கு பாடசாலை விடுமுறை வந்தது. மதனுடைய தந்தை கூறினார். "நீ உன்னுடைய சித்தி வீட்டுக்குப் போய் ஒரு கிழமை நின்று விட்டு வா" என்று கூறினார். "அப்பா கிளியை விட்டு நான் போகமாட்டேன்" என அடம் பிடித்தான். தந்தை கூறினார் "சரி கிளியுடனே சென்று வா" என்றார்.

மதன் சித்தியின் வீட்டில் வந்த அன்று சந்தோஷமாக பொழுது கழிந்தது. மற்ற இரண்டு நாட்களில் அவனுக்கு அம்மா, அப்பா, சகோதரர்கள் நண்பர்கள் போன்றோர்களைப் பார்க்க வேணும் என்ற ஆவல் வந்தது, சித்தியிடம் கேட்டான், சித்தி கூறினா "உனக்கு இங்கே என்ன குறை தொலைக்காட்சி பார்க்கின்றாய், றேடியோ,

பத்திரிகை, நேரம் தவறாத உணவு, அதைவிட சுவையான தின்பண்டங்கள் இவற்றை விட மேலானது உனக்கு என்ன வேண்டும் எனக்கேட்டார்." இவ்வாறு உரையாடிக் கொண்டு நிற்கும் போது மதனுடைய தந்தை வந்தார்.

"அப்பா நான் வீட்டை வரப்போகின்றேன். எங்கள் வீட்டை வரப்போன்றேன், எங்கள் வீட்டை விட இங்கு வசதி கூட என்றாலும் சிறை போல் இருக்கின்றது. அப்பா என்னை வீட்டை கூட்டிக்கிட்டு போங்கோ" என்று அழுதான்.

தந்தையும் சித்தியும் மதனை அர்த்தத்துடன் பார்த்தார்கள். "மதன் உன்னைப் போலத்தானே இந்தக்கிளியும் தன்னுடைய சுற்றத்தை நினைத்து ஏங்கி எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் என்பதனை எண்ணினாயா? நீ எவ்வளவு அன்பு வைத்தாலும் அதற்கு தன்னுடைய இனத்துடன் வாழ்வதுதான் சந்தோஷம். பொற் கம்பிகளால் அடைக்கப்பட்டாலும் சிறை சிறைதான்" எனக் கூறினார்.

"அப்பா சித்தி என்னை மன்னியுங்கள் இனிமேல் இப்படியான மிருகங்களை என்னுடைய அற்ப ஆசைக்காக அவர்களின் சுதந்திரத்தில் தலையிட மாட்டேன் துன்புறுத்த மாட்டேன்" எனக் கூறினேன்.

றெபெக்கா
தரம் : 10

---

**அரசியல் அரங்கம்**



வார்த்தைகள் விடுத்து
வாக்குகளின் எடுத்து
பதவியைப் பிடித்து
- அதற்காய்
தினம் செத்து
ஒசியிலே உடுத்து
ஜன மனங்களினை உடைத்து
நடக்குதிங்கோர் கூத்து
அரசியல் எனும் அரங்கிலே

## எனது கிராமம்.

எனது கிராமத்தின் பெயர் மணற்காடு. இக்கிராமத்தின் பெயருக்கேற்ப எங்கு பார்த்தாலும் மணல்மண்தேங்கிக் காணப் படுகின்றது. இக் கிராமம் ஐவகை நிலங்களில் இருவகை நிலங்களைக் கொண்டு அமைந்துள்ளது.

"ஓடி வரும் நெய்தலும் - நீலக்கடல் திரை சூழ
வான் உயர்ந்த பனைகளும் வாசம் தரும் மலர்களும்
நீர் சொரியும் நிலைகளும் நீண்ட நல் புல் வெளியும்
ஒலிக்கும் நல் ஆழியும் துள்ளி வரும் மீன்களும்
சவுக்குத் தோப்பிலிருந்து வரும் தென்றலும்
இனிமையாக ரீங்காரம் செய்கின்றது"

எமது கிராமம் யாழ் மாவட்டத்திலுள்ள வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. மீனவத் தொழிலே அனைத்து மக்களும் செய்கின்றார்கள்.

மண்வளம், நீர்வளம், நிலவளம் நிறைந்து காணப்படுகின்றது. கத்தோலிக்க மதத்தை சேர்ந்த மக்களே இங்கு வாழுகின்றனர். இக்கிராமம் ஓர் பின் தங்கிய கிராமமாக அதாவது புறக்கணிக்கப்பட்ட கிராமமாக கருதப்படுகின்றது. ஆரம்ப காலத்தைவிட இன்றைய காலத்தில் ஓரளவு எமது கிராமம் முன்னோக்கி செல்லுகின்றது. இம் முன்னேற்றத்துக்கு காரணம் அருட் தந்தை அவர்களும், இளைஞர் ஒன்றிய அமைப்பும் ஆகும். சென் அன்ரனிஸ் என்ற விளையாட்டுக் கழகம் உண்டு. இதனால் நாம் மாலை நேரங்களில் கால் பந்து விளையாட உதவி செய்கின்றது.

எமது கிராமத்தில் கல்வி வளர்ச்சியை நோக்கினால் கொஞ்சம் பின்தங்கிய நிலையிலே காணப்பட்டது. கல்வியை வளர்ப்பதற்கா இளஞர் ஒன்றியத்தால் மாலை நேர வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டு நடை பெறுகின்றது. அது மட்டுமல்லாது எமது பங்குத் தந்தை றோஜ் பேடினன் அவர்களால் மாணவர்கள் இரவு கல்வி கற்க மின்சார வசதி செய்து கொடுக்கப்படுகிறது. இது மாணவர்களாகிய எமக்கு ஓர் வரப்பிரசாதமாக காணப்படுகின்றது.

எமது கிராமத்தின் முன்னேற்றத்தில் இங்குள்ள மக்களும் கிராம பெரியவர்களும் ஒத்துழைப்பு நல்கினால் முன்னேறிவிடும். உல்லாசப் பயணிகள் வரும் ஓர் வரலாற்றுப்புகழ் மிக்க இடமாக காணப்படுகின்றது. எமது கிராமத்தின் வளர்ச்சி வெகுதூரத்தில் இல்லை என்று கூறினால் மிகையாகாது.

தே.யுட்டினேஸ், தரம் : 11

## எது அழகு

அழகு என்பதற்கு ஒரு வரையறுக்கப்பட்ட எல்லையோ அல்லது வரையறுக்கப்பட்ட இலக்கணமோ எவராலும் கூறமுடியாது. காரணம் அழகு என்பதை ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு கண்ணோட்டத்தில் காணுகின்றான். ஒவ்வோரு மனிதனுடைய எண்ணங்கள், சிந்தனைகள், கோட்பாடுகள், ஆசைகள், இரசனைகள் முதலியவற்றுக்கு ஏற்ப அவனது அழகுக் கோலங்கள் மாறுபடுகின்றது.

அழகுபற்றி ஓர் கருத்தை பொதுமறையான திருக்குறலில் நில்லா தனவற்றை நிலை என்று உணரும் புல்லறிவாண்மை கடை என்று கூறப்பட்டு உள்ளது. அதாவது இந்த அழகானது நிலையற்றது. அழியும் தன்மையுடையது. மாறுபடக்கூடியது. ஆனால் இவற்றை பேண முயற்சி இல்லாத மனிதனே இல்லையென்று கூறலாம். அழகு இரண்டு வகைப்படும் இயற்கை அழகு, செயற்கை அழகு.

இயற்கை அழகை எடுத்துக்கொண்டால் இதுவுமோர் அழியக்கூடிய அழகாகத்தான் காணப்படுகின்றது. இயற்கையிலுள்ள பொருட்களினால் அழகுபடுத்துவது இயற்கையழகாகும். இவையனைத்தும் தீ, காற்று, நீர் போன்றவற்றால் அழியக்கூடியது. அது மட்டுமல்லாது இன்று அழகுக் காக குறோட்டன்களே நாட்டப்படுகின்றன. பிரயோசனம் தரக்கூடிய பூக்கும் தாவரங்களோ வீட்டுத் தோட்டங்களிலே காணப்படு வதில்லை. அடுத்த அழகாக செயற்கை அழகை எடுத்துக்கொண்டால் இது பெரும் பாலானவை இரசாயன சம்பந்தமான கலவையாகவே காணப்படுகின்றது. இவையனைத்தையும் தோலில் பூசுவதனால் தோல் விகாரமாகவே காட்சியளிக்கின்றது. தோலில்தான் அழகு தங்கியுள்ளது. தோலை உரித்துவிட்டால் பேய்வடிவமாகவே காட்சியளிக்கும். எது எப்படியோ இன்றைய பெரும்பாலானவர்கள் அழியக்கூடிய அழகையே நாடுகின்றனர், போற்றுகின்றனர் என்று கூறினால் மிகையாகாது. இன்றைய காலத்தின் போக்கை அறிந்த நாலடியாரின் ஆசிரியர்,

**குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம் யாமென்னும் நடுவுநிலமையால்**
**கல்வி அழகே அழகு.**

என்று அழகாகப்பாடியுள்ளார். இதனால் நாம் அழியக்கூடிய அழகில் கவனம் செலுத்தாது பகைவர்கள், கள்வர்கள் போன்றோரால் கவர முடியாததும் அழியக்க முடியாததுமான கல்வியின் அழகே எம் முடன் இறுதிவரை மாற்றமடையாத கல்வியின் அழகைப்பேண மாண வர்கள் நாம் முயன்றிடவேண்டும்.

பு.மேரி இமெல்டா, தரம் : 10

## தொலைத் தொடர்பு சாதனங்கள்

நாம் இன்று 21ம் நூற்றாண்டில் வாழ்கின்றோம், விஞ்ஞானத்தின் விந்தைகளைக் கண்டு வியப்படையும் காலம் இது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் தகவற் பரிமாற்ற முறைகளிலும் மாற்றங்கள் உருவாகியுள்ளன.


ஆரம்ப காலத்தில் மனிதன் முரசு, தீ போன்றவற்றைப் பயன்படுத்தி தொலைவில் உள்ளவர்களுக்குத் தகவல் அனுப்பினான். அதன் பின்பு புறா மூலம் தகவல்களைப் பரிமாறினான். அதனைத் தொடர்ந்து கடிதம் மூலமும் தொடர்பு கொள்ள ஆரம்பித்தான். அதன்பின்னர் தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டான்.

கணனியின் வருகையால் மனிதர்களிடையே வேலைச்சுமை குறைக்கப்படுகின்றது. தேவையான தகவல்களை கணனியில் சேமித்து வைக்கமுடிகின்றது. அதே போன்று கணனிமூலம் பல்வேறு தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

கணனி மூலம் காதுக்கினிய பாடல்களைக் கேட்கலாம், திரைப்படங்களையும் பார்க்கலாம். கணனிமூலம் மற்றவர்களுக்கு மின்னஞ்சல் கடிதங்களையும் அனுப்பலாம். இப்போது கணனி வழியாக உலகின் பல இடங்களில் இருப்பவர்களுடனும் தொடர்பு கொள்ள முடிகின்றது. இது "இன்ரநெற்" என அழைக்கப்படுகின்றது. இதற்கு இணையம் உதவுகின்றது.

இணைய இணைப்பை ஏற்படுத்தி நாம் உலகில் பல்வேறு நாடுகளில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு உரையாட முடியும் எமது சந்தேகங்களுக்கான விளக்கங்களைப் பெறமுடியும். இணையத்தின் மூலம் பலநாடுகளில் உள்ள நூல் நிலையங்களோடு தொடர்பு கொண்டு அவற்றினைக் கற்றுக்கொள்ள முடியும்.

என்ன ஆச்சரியமா இருக்கிறதா? கணனியின் வருகையால் ஏற்பட்ட விந்தைகளைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே போகலாம். இனி நாங்கள் எல்லோரும் கணனியோடு அளவலாவும் காலமாகிவிட்டது.



ஆக்கம் :-
இ.யேசுறூபன்
தரம் : 11
மணற்காடு, குடத்தனை

